**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**DEPOSITION OF WITNESS**

**R.W.1**

**MCOP No. 127/2020**

| | |
|---|---|
| **Name** | **: பாரதிராஜன்** |
| **Husband's Name** | **: ராமசாமி** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 21.08.2025.**

**எ.ம.சா.1 முதல் விசாரணை:-**

1) நான் நீதிமன்றத்தில் வந்த அழைப்பாணை அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். எனக்கு இந்த விபத்து வழக்கின் விவரங்கள் பற்றி மற்றவர்கள் சொல்லி தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான் என்றால் இல்லை. நான் துண்டு சீட்டில் தான் கையெழுத்து போட்டேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனக்கு இந்த விபத்து பற்றி தெரியும் என்று நான் எழுதி கொடுத்திருக்கிறேன் என்றால் இல்லை. கனகராஜ், ஆராயியை தெரியும். அவர்கள் எனது வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர்கள். கனகராஜ் வண்டியில் அடிபட்டு இறந்தார். நெல்லு அறுக்கும் இயந்திரத்தில் அடிபட்டு இறந்துவிட்டார். விபத்தில் அடிபட்ட உடனே தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அரசு வாழப்பாடி மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொல்லி உள்ளேன். ஆம்புலன்சில் கொண்டு செல்லும் வழியில் ஆம்புலன்ஸ் எண்.TN 27 E 2035 மற்றும் TN 52 W 7141 என்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று நான் சொல்லவில்லை.

2) கனகராஜை வேறு வாகனத்தின் மூலம் வாழப்பாடி மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக நான் சொல்லி உள்ளேன் என்றால் அது எனக்கு தெரியாது. கனகராஜ் அடிபட்டு வாகனத்தில் எடுத்து செல்லும்போது உயிருடன் இருந்தார் என்றால் அவருக்கு அதிக அடிபட்டு சுய நினைவி இல்லாமல் இருந்தார் என்று சொல்கிறார். மனுதாரர் போட்ட வழக்கில் அடிபட்ட கனகராஜ் ம.சா.1 மற்றும் 2 படி தனியார் ஆம்புலன்சில் சென்றபோது அடிபட்ட போது காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் வாழப்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. கனகராஜ் அடிபட்டவுடன் எடுத்துசென்ற ஆம்புலன்ஸ் அடிபட்டவுடன் மற்றொரு ஆம்புலன்சில் சிகிச்சைக்காக எடுத்த சென்றதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

3) உயிர் இருந்ததால் தான் உயிரை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் மற்றொரு ஆம்புலன்சில் ஏற்றி சென்றார்கள் என்று சொன்னால் முதல் ஆம்புலன்சில் ஏற்றும்போதே இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் நேரில் பார்க்கவில்லை. அவர்கள் சொன்னதை தான் சொல்கிறேன். விபத்து வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்களுக்கும் என்னுடைய சாட்சியத்திற்கும் முண்ணுக்குப்பின் முரணாக உள்ளது என்றும் நான் மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேள்விபட்டதன் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். அவ்வாறு உண்மையிலேயே எனக்கு விசயம் தெரிந்து இருந்தால் அது பற்றி நான் மனுவாக எழுதி கொடுத்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல.

4) எனக்கு கனகராஜ் தெரியும் (ம.சா.2). இந்த மனுவில் உள்ள 2 மற்றும் 3 மனுதாரர்கள் எனக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல. எனக்கு பக்கத்து வீடு மற்றும் அருகில் தெரிந்தவர்கள். உண்மையிலேயே கனகராஜ் நெல் அறுவை இயந்திரத்தில் மோதி இறக்கவில்லை என்றும் அவர் குற்றுயிரும் கொலை உயிருமாகத்தான அவர் முதல் ஆமபுலன்சில் எடுத்துச்செல்லப்பட்டார் என்றும் விபத்து ஏற்பட்ட பின்னிட்டு தான் ஆம்புலன்சில் எடுத்து செல்லும்போது தான் அவர் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்து 5 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்டது. தேதி தெரியாது.

மனுதாரர் கேட்டுக்கொண்டதன் பெயரில் நான் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பற்றி நன்கு தெரியும் என்றும் நான் ஏற்கனவே இது சம்பந்தமாக மனு எழுதி கொடுத்துவிட்டு கையெழுத்து போட்டு விட்டு தற்போது துண்டு சீட்டில் தான் கையெழுத்து போட்டேன் என்றும் மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.08.21 05:49:31 +0530

**Accidents Claim Tribunal, Attur.**